107—

சத்துணவு மையம்

***523—திரு. கே.பி. கந்தன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருங்குடி பேரூராட்சி, கல்லுக்குட்டை பகுதியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருங்குடி மாநகராட்சி மண்டலத்திற்குட்பட்ட கல்லுக்குட்டைப் பகுதியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் ஏதும் செயல்படவில்லை. அவ்வாறு அந்தப் பகுதியில் பள்ளி அமையும்பட்சத்தில் விதிகளின்படி அந்தப் பள்ளி வளாகத்திற்குள்ளேயே சத்துணவுக் கூடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் முன்பு எப்போதும் இல்லாத வகையில் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி, கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைப் பொற்பாதம் பணிந்து சமர்பிக்கிறேன். சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிழக்கு கடற்கரைச் சாலை உத்தண்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் தனியாக ஒரு சத்துணவு மையம் அமைத்திட ஆவன செய்யுமாறு பணிவோடு வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தண்டியிலே இருக்கிற பள்ளியின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தால் அதை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையைப் பெற்று, சத்துணவு மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***36846—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவங்கும் கருத்துரு